www.spschweiz.ch/migranten
www.pssuisse.ch/migrants



25. நவம்பர் 2018

# ஆபத்ததான சுவிற்சர்லாந்து மக்கள் கட்சியின் (SVP) சுயநிர்ணய உரிமை மசோதாவிற்கு நிராகரிப்போம்

SP PS







தொழிளாளர் உரிமை மற்றும் மனித உரிமைபாதுகாப்பிற்கு எதிரான தாக்குதலாக இருப்பதனால் நான் இம் மசோதாவிற்கு இல்லை என வாக்களிக்க கோருகின்றேன். இம் மசோதா சாவதேச உடன்படிக்கைகளை அலட்சியப்படுத்துவதனாலும் சர்வதேச சட்டங்களாலும் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்றி ஆதிக்க சக்திகளின் நடவடிக்களை கட்டுப்படுத்த முடியாதினாலும் இம் மசோதாவை நிராகரிக்கின்றேன்.

**Sutha Ganapathipillai,** Präsident
SP MigrantInnen Solothurn

சர்வதேச உடன்படிக்கைகளை நிராகரிப்பதனால் இம் மசோதாவிற்கு இல்லை என வாக்களிக்கின்றேன். தனியே உள்;நாட்டு சட்டதிட்டங்கள் மட்டும் மக்களின் உரிமைகளையும் இறைமைகளையும் சுவிற்சர்லாந்து போன்ற சிறிய நாடுகளால் ஆதிக்கசக்திகளிடமிருந்தும் எதேச்சதிகாத்திலிருந்து பாதுகாத்து கொள்ள முடியாது. Trump, Putin, Erdogan போன்ற அரசியல்வாதிகள் இவ்வகை உடன்படிக்கைகள் இன்றி கட்டுப்படுத்த முடியாது.

**Claudia Friedl,** Nationalrätin, St. Gallen

எதேச்சதிகார அரசுகளினால் பாதுகாப்பு இன்றிதவிக்கும் மக்களிற்காக இம் மசோதாவிற்கு இல்லை என்று வாக்களிக்கின்றேன். சாவதேச மனித உரிமை சட்டங்களே எதேச்சதிகாரத்தினை கட்டுபடுத்தி எமது சுதந்திரத்தினையும் இறைமையையும் பாதுகாத்து கொள்ளமுடியும். இம் மசோத இந்த உரிமையை மறுக்கின்றது.

**Rupan Sivagnesan,** Kantonsrat Zug

**மனித உரிமை பாதுகாப்பிற்கு எதிரான முன்தாக்குதலிற்கு எதிராக இல்லை என வாக்களிப்போம்.**
SVP யினால் கொண்டுவரப்பட்ட இம் மசோதா மனித உரிமை பாதுகாப்பிற்கு எதிரான முன்தாக்குதல். ஆதிக்க அரசுகளும் ஊழல் நிறைந்த ஆதிக்க அரசியல்வாதிகள் தமது சொந்த விருப்பத்தினை நிவேற்றுவதற்கு மக்கள் அதிகாரத்தினை உலகில் குழி தோண்டி புதைக்க முறப்படுகின்றனா். சுவிற்சர்லாந்;து மக்கள் மனித உரிமை பாதுகாப்பு மிக முக்கியமானது என்பனை தற்பொழுது எல்லோ ராலும் உடன்படுகின்றது. சர்வதேச சட்டங்களையும் கடமைகளையும் உரிமைகளையும் அலட்சியப்படுத்துவதை தடுக்க தவறின் உலகில் பல தவறான அரசுகளையும் ஒடுக்குமுறையாளர்களையும் உருவாக்;க தடுக்க முடியாதவர்கள் ஆகிவிடுவோம்.

**சர்வதேச உடன் படிக்ககைகளை அலட்சியப்படுத்துவதை அல்லது நிராகரிப்பதை இல்லை என்று வாக்களித்து மறுப்போம்.**
சுவிற்சர்லாந்து போல் சிறிய நாடுகளின் மக்கள் உரிமைகள் நாடுகடைகளிற்கடையான உடன்படிக்கைகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஆதிக்க அரசுகளிடமிருந்து பாதுகாக்க முடிகின்றது. அதே போல் சில உள்நாட்டு சட்டங்களும் இவ்வகை ஆதிக்க அல்லது ஆக்கிரமிப்பு அரசுகளிடமிருந்து பாதுகாக்க உதவுகின்றது. இன்றைய காலகட்டத்தில் சுவிற்சர்லாந்து சர்வதேச உடன்படிக்கைகளை பாதுகாக்க வேண்டியது கட்டாயமாகின்றது. மிக நேர்த்தியான சட்டதிட்டங்களால் மட்டுமே அரச ஏதேச்சதிகாரத்தினை கட்டுபடுத்த முடியும். சர்வதேச சட்டங்கள் இல்லாவிடில் குறிப்பிட்ட ஆதிக்க அரசியல் வாதிகளான Trump, Putin, Erdogan போன்றவர்களை இனங்கண்டுகொள்ள முடியாது. ஆதலால் SVP யினால் கொண்டுவரப்பட்ட மசோதாவிற்கு இல்லை என்று வாக்களிப்போம்.

**எதேச்சதிகார அரசுகளினால் உருவாக்கப்படும் பாதுகாப்பின்மைக்கு எதிராக இல்லை என்று வாக்களிப்போம்.**
சர்வதேச மனிதஉரிமை சட்டங்களே எதேச்சாதிகராப்போக்கினை கட்டுப்படுத்தி மேலும் எமது சுதந்திரத்தினையும் இறமையையும் பாதுகாக்கின்றது. மக்கள் உரிமையான வதிவிட உரிமையும் குழந்தைகள் குடும்பத்துடன் வாழும் உரிமையையும் மேலும் எதேச்சதிகாரமான கைதுகளையும் நாட்டைவிட்டு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய மனிதஉரிமைகள் ஒப்பந்தம் (EMRK) பாதுகாப்பு அளிக்கின்றது. இம் மசோதா பல் வேறு மக்களின் உரிமைகள் மீதான சட்டங்களை கேள்விக்கு உள்ளாக்குகின்றது. இதனாலேயே இல்லை என்று வாக்களிப்போம்.

# எப்படி வாக்களிப்பது?

TAMILISCH




வெளித் தபால் உறையினை திறவுங்கள். (பின் பக்கத்தில் அடையாளமிடப்பட்ட இடத்தில் திறவுங்கள்)

வாக்குப் பத்திரத்தினை பூர்த்தி செய்யுங்கள்

வாக்குப் பத்திரத்தை சிறிய தபாலுறைக்குள் வைத்து ஒட்டுங்கள்

வாக்குரிமை அட்டையில் கையொப்பம் இடுங்கள்

(கையொப்பமிட்ட) வாக்குரிமை அட்டையையும் வெளித் தபாலுறைக்குள் வையுங்கள்.

வெளித் தபாலுறையினை மூடி பெப்ரவரி 17.11. தபாலில் அனுப்பி வையுங்கள். அல்லது பெப்ரவரி 24.11. முன்னர் உங்கள் நகரசபை அல்லது கிராமசபை இன் தபால் பெட்டிக்குள் போட்டுவிடுங்கள்

## குடியேற்றவாசிகள் தீர்மானகரமான சக்திகள்

கடந்த ஆண்டுகளில் சுவிற்சர்லாந்தில் ஒரு மில்லியன் மக்கள் இந் நாட்டுப் பிரஜைகளாக அங்கீகரிக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களில் 880000 பேர் பதினைந்து வயதிற்கு மேற்பட்ட சுவிற்சர்லாந்து பிரஜைகள், அத்துடன் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள். சுவிற்சர்லாந்து குடியேற்ற வாசிகள் நடைபெறப்போகும் அபிப்பிராய வாக்கெடுப்பில் வாக்குகளை சரியான முறையில் பிரயோகித்து இம் மசோதாவுக்கு எதிராக வாக்களித்தால் எமது பெரும்பான்மை பலத்தினை நிரூபிக்க முடியும். எமது வாக்குகளை பயன்படுத்தினால் ஆபத்தான சுவிற்சர்லாந்து மக்கள் கட்சியின் (SVP) சுயநிர்ணய உரிமை மசோதாவை நிராகரிப்பது சாத்தியம்.

**யேர்மன், மொழி தொடர்புகளிற்கு**: SP MigrantInnen, Postfach 7876, 3001 Bern
Telefon 031 329 69 69, info@spschweiz.ch, www.spschweiz.ch/migranten
PS Migrant-e-s, case postale 7876, 3001 Berne, téléphone 031 329 69 69
info@pssuisse.ch, www.pssuisse.ch/migrants